©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 21] சென்னை, புதன்கிழமை, மே 24, 2023
வைகாசி 10, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு—2054

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண். 193, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்(F.R.5)துறை, 7 நவம்பர் 2022.]*

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் அஞ்செட்டி வட்டம், தருமபுரி மாவட்டத்தின் பென்னாகரம் மற்றும் பாலக்கோடு வட்டங்களின் காப்பு வனப்பகுதிகள், தமிழ்நாட்டின் காவிரி வடக்கு வனவிலங்குகள் சரணாலயத்திற்கும், கருநாடக மாநிலத்திலுள்ள காவிரி வனவிலங்குகள் சரணாலயத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இப்பகுதி போதுமான சுற்றுச்சூழல், விலங்கின மற்றும் தாவர முக்கியத்துவம் பெற்றிருப்பதுடன், வனவிலங்குகளையும், அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாப்பதற்கும், மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையே ஏற்படும் மோதலைக் குறைப்பதற்கும் வனவிலங்குகள் சரணாலயமாக இதனை நிருவகிக்க வேண்டியது அவசியமாகும் என்பதாலும்,

இது 686.406 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டு, தென்னிந்தியாவில் ஒரு முக்கியமான யானை வாழ்விடமாகவும், காவிரி ஆற்றைச் சார்ந்துள்ள ஏராளமான நதிசார் வாழ்வினங்களுக்கு இன்றியமையாததாகவும் அமைந்துள்ளது என்பதாலும், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பு வனங்கள், காவிரி வடிநிலத்தின் ஒரு தனித்துவமான சூழலியல் அமைப்பை உருவாக்குவதுடன், ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் நுழைவதற்கு முன்பு காவிரி ஆற்றின் கடைப்பகுதி வனங்களைக் கொண்ட தாழ்வான பகுதிகளாக அமைவதாலும்,

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது, காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் 50 கிலோமீட்டருக்கும் அதிகமான நீளத்திற்கு ஒரே மாதிரியான சட்டத் தகுதிநிலையையும் பாதுகாப்பையும் கொண்டுள்ள, பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் ஒரு பெரிய, தொடர்ச்சியான தொடரமைப்பாகும். இந்நிலப்பரப்பு, நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தின் தொடர்ச்சி கருநாடகாவின் மாதேசுவரன் மலை விலங்குகள் சரணாலயம், பில்லிகிரி ரங்கசுவாமி கோயில் புலிகள் காப்பகம், தமிழ்நாட்டின் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் மற்றும் ஈரோடு வனக்கோட்டம் வழியாக மேற்கொண்டும் நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம் வரையில் நீள்வதாலும்,

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி பரப்பளவில் பெரியதாக இருப்பதாலும், நந்திமங்கலம்—உலிபண்டா யானை வழித்தடம், கோவைப்பள்ளம்—அனேபிட்டஹல்லா யானை வழித்தடம் என இரண்டு முக்கியமான யானை வழித்தடங்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாலும்,

விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி, 35 வகைப் பாலூட்டிகளும், 238 வகைக்கு குறையாத பறவையினங்களும் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு உதவும் வகையில் அமைந்திருப்பதாலும், லெயித் இலகு ஓட்டு ஆமைகள் (Leith's Soft–shelled turtles), சாம்பல் நிற அணில் (Grizzled Giant Squirrel), ஆற்று நீர் நாய் (Smooth–coated Otter), சதுப்புநில முதலை (Marsh Crocodile), நாற்கொம்பு கலைமான் (Four–horned Antelope), சிறிய மீன் கழுகு (Lesser Fish Eagle) போன்ற சில விலங்குகள், பெரும்பாலும் காவிரி நதி மற்றும் அதன் ஆற்றங்கரை வனச்சூழலை மட்டுமே சார்ந்திருப்பதுடன் அருகி வரும் உயிரினங்களாகப் பட்டியலிடப்பட்டிருப்பதால் அவற்றின் வசிப்பிடத்தைப் பாதுகாக்கும் முழுமுயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும்,

இதற்கு அருகாமையில் அடுத்தடுத்து அமைந்துள்ள கருநாடகாவின் மாதேசுவரன் மலை வனவிலங்குகள் சரணாலயம், பன்னர்கட்டா தேசிய பூங்கா போன்ற பகுதிகளில் புலிகள் வெற்றிகரமாகப் பாதுகாக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டில் அருகி வந்த புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இந்த சரணாலயத்தின் வனப்பகுதிகள் அதே நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும். மேலும், பாதுகாப்பு மற்றும் வாழ்விட மேம்பாட்டின் வாயிலாக இரை ஆதாரத்தை மீட்டெடுக்க இயலும் என்பதுடன், இப்பகுதி கடந்த காலத்தில் இருந்தது போல், மீண்டும் புலிகளின் பெருக்கத்தை ஊக்குவித்து சிறுத்தை மற்றும் அருகி வரும் ஏனைய பெரிய மாமிச உண்ணிகளின் பாதுகாப்பையும் மேம்படுத்தும் என்பதாலும்,

எனவே, தற்போது 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1972) 26–A–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) கீழ், காப்பு வனங்களாக அறிவிக்கப்பட்டு கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட பகுதி, வனவிலங்கு மற்றும் அதன் சுற்றுச்சூழலை பாதுகாத்து, உருவாக்கி மேம்படுத்தும் நோக்கத்திற்கான போதிய சூழலியல், விலங்கின, தாவர, இயற்கை மற்றும் விலங்கியல் முக்கியத்துவம் கொண்டிருப்பதாக கருதியுள்ளதால், கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை, 08.11.2022 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் வகையில் சரணாலயமாக இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை**

(1) மாவட்டங்களின் பெயர்: கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி

(2) வட்டங்களின் பெயர்: (a) கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அஞ்செட்டி வட்டம்

(b) தருமபுரி மாவட்டத்திலுள்ள பென்னாகரம் மற்றும் பாலக்கோடு வட்டங்கள்

(3) சரணாலயத்தின் பெயர்: காவிரி தெற்கு வனவிலங்கு சரணாலயம்

(4) சரணாலயத்தின் பரப்பளவு: 68,640.613 எக்டேர் அல்லது 686.406 சதுர கிலோமீட்டர்

**காப்பு வனம் குறித்த விவரங்கள்**

| *தொ. எண்.* | *காப்பு வனத்தின் பெயர்* | *காப்பு வனத்தின் மொத்தப் பரப்பளவு (எக்டேரில்)* | *சாலைகள் நீங்கலாக சரணாலயத்தின் பரப்பளவு (எக்டேரில்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| **I** | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** | | |
| 1 | கெஸ்தூர் காப்புவனம் | 5,855.460 | 5,855.460 |
| 2 | கெஸ்தூர் காப்பு வனத்துடன் சேர்க்கப்பட்டது | 145.680 | 145.680 |
| 3 | கெஸ்தூர் விரிவாக்க காப்பு வனம் | 2,574.210 | 2,574.210 |
| 4 | மஞ்சுகொண்டப்பள்ளி காப்புவனம் | 365.485 | 365.485 |
| 5 | பிலிக்கல் காப்புவனம் | 5,433.310 | 5,429.440 |
| 6 | உரிகம் காப்புவனம் | 3,231.010 | 3,221.608 |
| 7 | மல்லஹள்ளி காப்புவனம் | 4,034.001 | 4,034.001 |
| 8 | தக்கட்டி காப்பு வனம் | 4,341.470 | 4,341.361 |
| 9 | உலிபண்டா காப்புவனம் | 3,241.530 | 3,238.680 |
| 10 | உலிபண்டா விரிவாக்க காப்பு வனம் | 62.580 | 62.580 |
| 11 | உப்ராணி காப்பு வனம் | 4,831.950 | 4,830.069 |
| 12 | நாட்றம்பாளையம் காப்பு வனம் | 4,986.941 | 4,981.590 |
| 13 | பிலிகுண்டுலு காப்பு வன விரிவாக்கம்–II | 58.980 | 58.980 |
| 14 | பிலிகுண்டுலு காப்பு வனம் | 6,092.138 | 6,088.281 |
| 15 | ஒட்டப்பட்டிகாப்பு வனம் | 2,557.620 | 2,554.840 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தப் பரப்பளவு** | **47,812.365** | **47,782.265** |
| **II** | **தருமபுரி மாவட்டம்** | | |
| 16 | ஒட்டபட்டி (பகுதி) | 3,046.170 | 3,046.170 |
| 17 | கூட்டிராயன் (பகுதி) | 6,666.860 | 6,666.860 |
| 18 | மொரப்பூர் காப்புவனம் | 7,816.190 | 7,816.190 |
| 19 | காசர்குலி காப்பு வனம் | 3,290.940 | 3,284.608 |
| 20 | காசர்குலி விரிவாக்க காப்பு வனம் | 44.520 | 44.520 |
| | **தருமபுரி மாவட்டத்தில் மொத்தப் பரப்பளவு** | **20,864.680** | **20,858.348** |
| | **சரணாலயத்தின் மொத்த பரப்பளவு** | **68,677.045** | **68,640.613** |

**நாற்புற எல்லை விவரம்**

**மேற்கு:** கருநாடகம்–தமிழ்நாடு மாநிலங்களுக்கு இடையேயான எல்லையில் உள்ள கெஸ்தூர் விரிவாக்க காப்பு வனத்தின் வடக்குப் புள்ளியிலிருந்து தொடங்கி, காவிரி – தெற்கு வனவிலங்குகள் சரணாலயத்தின் எல்லையானது பொதுவாக, கெஸ்தூர் காப்பு வனத்தின் மேற்கு எல்லை வழியாக தெற்கு நோக்கிச்சென்று, கெஸ்தூர் காப்பு வனத்தின் தென்மேற்கு மூலையில் காவிரி நதி வரை செல்கிறது.

**தெற்கு:** அங்கிருந்து, கெஸ்தூர் காப்பு வனத்தின் தென்மேற்குப் பகுதியில் தொடங்கும் எல்லையானது, காவிரி ஆற்றின் வழியே கிழக்கு நோக்கியும், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மாநிலங்களுக்கு இடையேயான எல்லை வழியே கெஸ்தூர் காப்புவனம், பிலிக்கல் காப்புவனம், மல்லஹள்ளி காப்புவனம், நாட்றம்பாளையம் காப்பு வனம் ஒட்டப்பட்டி காப்புவனத்தின் தெற்கு எல்லை வழியாகவும் சென்று, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஒட்டப்பட்டி காப்பு வனத்தில் தொடங்கி தருமபுரி மாவட்டத்தின் ஒட்டப்பட்டி காப்பு வனம் வரை செல்லும் ஆனேபெத்தமடுவு ஓடை வரை செல்கிறது. பிறகு அவ்வெல்லையானது, **தென்கிழக்கே** தருமபுரி மாவட்டத்தின் ஒட்டப்பட்டி காப்புவனத்தில் ஆனைபெத்தமடுவு ஓடை வழியாகச் சென்று அவ்வோடை தருமபுரி மாவட்டத்தின் ஒட்டப்பட்டி காப்புவனத்திலுள்ள சின்னார் ஆற்றில் இணையும் வரை செல்கிறது.

**கிழக்கு:** அங்கிருந்து, எல்லை பொதுவாக வடகிழக்கு திசையில் தருமபுரி மாவட்டத்தின் ஒட்டப்பட்டி காப்பு வனம் வழியாக சின்னார் ஆற்றின் வழியே ஒட்டப்பட்டி, கூட்டிராயன், மொரப்பூர், காசர்குலி காப்புவனத்தின் கிழக்கு எல்லைகள் வழியாகச் சென்று, காசர்குலி காப்பு வனத்தின் வடகிழக்கு இறுதிப்பகுதியிலிருந்து, எல்லையானது வடமேற்குத் திசையில் திரும்பி காசர்குலி காப்பு வனம், காசர்குலி காப்பு வன விரிவாக்கம் ஆகியவற்றின் வட எல்லை காவிரி வடக்கு வனவிலங்குகள் சரணாலயத்தின் தொழுவபெட்டா விரிவாக்க காப்பு வனத்தின் வடகிழக்கு எல்லையைச் சந்திக்கிறது.

**வடக்கு:** அங்கிருந்து, எல்லையானது, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் காவிரி வடக்கு வனவிலங்குகள் சரணாலயத்தின் தொழுவபெட்டா காப்புவன விரிவாக்கமும் தருமபுரி மாவட்டத்தின் காசர்குலி காப்பு வனமும் அவற்றின் வடபுறத்தில் சந்திக்கும் மாவட்ட எல்லைப் பகுதியில் தொடங்கி தெற்கு நோக்கி, தருமபுரி மாவட்டம் மொரப்பூர் காப்பு வனம் மற்றும் தருமபுரி கோட்டத்தின் கூட்டிராயன் காப்பு வனத்தின் மேற்கு எல்லை வழியாக பிலிகுண்டுலு காப்பு வனத்தின் வடகிழக்குப் புள்ளிவரை செல்கிறது. அதன்பிறகு அவ்வெல்லையானது பிலிகுண்டுலு காப்பு வனத்தின் வடக்கு மற்றும் மேற்கு எல்லை வழியாக நாட்றம்பாளையம் காப்புவனம் வரை செல்கிறது. அங்கிருந்து வடமேற்கு திசையில் நாட்றம்பாளையம் காப்பு வனத்தின் கிழக்கு எல்லை வழியாகவும், ஷேஷராஜபுரத்துக்கு அருகே உப்ராணி காப்பு வனத்தின் கிழக்கு எல்லை வழியாகவும் செல்கிறது. அங்கிருந்து வடக்கு திசையில் உப்ராணி காப்புவனத்தின் கிழக்கு எல்லை வழியாக தமசேனப்பள்ளி அருகே உள்ள அஞ்செட்டி கிராமம் வரை செல்கிறது. அங்கிருந்து, எல்லையானது, உப்ரானி காப்பு வனத்தின் வடக்கு எல்லை வழியாகச் சென்று, அதன்பிறகு, உலிபண்டா காப்பு வனத்தின் கிழக்கு எல்லை வழியாக, தமிழ்நாடு–கருநாடகம் மாநிலங்களின் எல்லை வரை செல்கிறது. பின்னர், அது மாநிலங்களுக்கு இடையேயான எல்லையில் தெற்கு நோக்கிச் சென்று, உலிபண்டா காப்பு வனத்தின் மேற்கு எல்லை வழியாகச் செல்கிறது. அங்கிருந்து, எல்லையானது தக்கட்டி காப்பு வனத்தின் வடக்கு எல்லை வழியாகவும், உரிகம் காப்பு வனத்தின் கிழக்கு எல்லை வழியாகவும் வடமேற்கு திசையில், தமிழ்நாடு–கருநாடக மாநிலங்களுக்கு இடையேயான எல்லை வரை செல்கிறது. பின்னர், இவ்வெல்லை தொடக்கப் புள்ளியை அடையும் வரை மாநிலங்களுக்கு இடையேயான எல்லை வழியாகச் செல்கிறது.

**நீக்கப்பட்ட பகுதிகள்:**

பின்வரும் சாலைகள், பாதைகள் மற்றும் அடைவுப்பகுதிகள் காவிரி தெற்கு வனவிலங்குகள் சரணாலயத்திலிருந்து நீக்கப்படும்:–

**1. சாலைகள் மற்றும் பாதைகள் :**

| *தொ. எண். (1)* | *சாலைகள் மற்றும் பாதைகள் (2)* | | *நீளம் (கிலோமீட்டரில்) (3)* | *அகலம் (கிலோமீட்டரில்) (4)* |
|---|---|---|---|---|
| | *------முதல் (புவியிடச்சுட்டிகளுடன்)* | *------வரை (புவியிடச்சுட்டிகளுடன்)* | | |
| **I** | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** | | | |
| (i) | **பூமரத்துக்குளி கிராமம்**<br>(நாட்றம்பாளையம் அடைவுப்பகுதி)<br>அட்சரேகை : 12.23247° N<br>தீர்க்கரேகை : 77.73437° E | **கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களின் எல்லை:**<br>(நாட்றம்பாளையம் மற்றும் ஒட்டப்பட்டி காப்புவனங்கள்)<br>அட்சரேகை : 12.15660° N<br>தீர்க்கரேகை : 77.74946° E | 10.840 | 7.50 |
| (ii) | ஏத்தக்கிணறு (எட்டாக்கிணோறு) கிராமம்<br>(நாட்றம்பாளையம் அடைவுப்பகுதி)<br>அட்சரேகை : 12.2628° N<br>தீர்க்கரேகை : 77.7809°E | கேம்பக்கேரை<br>(கேம்பக்கேரை) கிராமம் (பிலிகுண்டுலா காப்புவனம்)<br>அட்சரேகை : 12.26675° N<br>தீர்க்கரேகை : 77.81958° E | 6.429 | 6.00 |
| (iii) | அஞ்செட்டி கிராமம்<br>அட்சரேகை : 12.33885° N<br>தீர்க்கரேகை : 12.69095° E | தக்கட்டி கிராமம் (உப்ரானி மற்றும் ஹுலிபண்டா காப்புவனங்கள்)<br>அட்சரேகை : 12.32298° N<br>தீர்க்கரேகை : 77.65866° E | 5.465 | 6.00 |

| தொ. எண். (1) | சாலைகள் மற்றும் பாதைகள் (2) | | நீளம் (கிலோமீட்டரில்) (3) | அகலம் (கிலோமீட்டரில்) (4) |
|---|---|---|---|---|
| | ------முதல் (புவியிடச்சுட்டிகளுடன்) | ------வரை (புவியிடச்சுட்டிகளுடன்) | | |
| (iv) | தக்கட்டி கிராமம்<br>அட்சரேகை : 12.33399° N<br>தீர்க்கரேகை : 77.63988° E | உரிகம் (உரிகம் காப்பு வனம்) கிராமம்<br>அட்சரேகை : 12.32241° N<br>தீர்க்கரேகை : 77.62232° E | 5.410 | 6.00 |
| (v) | அத்திநத்தம் குறுக்குச்சாலை<br>அட்சரேகை : 12.33841° N<br>தீர்க்கரேகை : 77.62584° E | அத்திநத்தம் கிராமம் ஜோடிக்கெரே வழி (உரிகம்)<br>அட்சரேகை : 12.30591° N<br>தீர்க்கரேகை : 77.63878° E | 5.610 | 6.00 |
| (vi) | அத்திநத்தம் குறுக்குத் தெரு<br>அட்சரேகை : 12.33841° N<br>தீர்க்கரேகை : 77.62584° E | உடுபரணே (உடுபரணே) கிராமம் (உரிகம் காப்புவனம்)<br>அட்சரேகை : 12.34827° N<br>தீர்க்கரேகை : 77.61300° E | 2.200 | 6.00 |
| (vii) | உரிகம் கிராமம்<br>அட்சரேகை : 12.31635° N<br>தீர்க்கரேகை : 77.60257° E | பிலிக்கல் கிராமம் (உரிகம் காப்புவனம்)<br>அட்சரேகை : 12.31877° N<br>தீர்க்கரேகை : 77.59330° E | 1.850 | 6.00 |
| (viii) | பிலிக்கல் கிராமம்<br>அட்சரேகை : 12.31993° N<br>தீர்க்கரேகை : 77.59418° E | முத்திகரை கிராமம் (உரிகம் காப்புவனம்)<br>அட்சரேகை : 12.32519° N<br>தீர்க்கரேகை : 77.59404° E | 0.600 | 6.00 |
| (ix) | அத்திநத்தம் கிராமம்<br>அட்சரேகை : 12.28761° N<br>தீர்க்கரேகை : 77.64797° E | நூறுந்துசாமிமலை கிராமம் (தக்கட்டி காப்புவனம்)<br>அட்சரேகை : 12.28634° N<br>தீர்க்கரேகை : 77.64858° E | 0.182 | 6.00 |
| (x) | பிலிக்கல் கிராமம்<br>அட்சரேகை : 12.28276° N<br>தீர்க்கரேகை : 77.55996° E | பேல்பட்டி (பாயில்பட்டி) கிராமம் (பிலிக்கல் காப்புவனம்)<br>அட்சரேகை : 12.31750° N<br>தீர்க்கரேகை : 77.58387° E | 6.450 | 6.00 |
| (xi) | சூலகுண்டா கிராமம்<br>அட்சரேகை : 12.40140° N<br>தீர்க்கரேகை : 77.64375° E | ஹூலிபண்டா(உலிபண்டா) கிராமம் (உலிபண்டா காப்புவனம்)<br>அட்சரேகை : 12.42215° N<br>தீர்க்கரேகை : 77.64291° E | 2.420 | 6.00 |
| **II** | **தருமபுரி மாவட்டம்** | | | |
| (xii) | திம்மலன்மேடு கிராமம்<br>அட்சரேகை : 12.29153° N,<br>தீர்க்கரேகை : 77.94362° E | கோட்டூர்மலை கிராமம்<br>(காசர்குலி காப்புவனம்)<br>அட்சரேகை : 12.27708° N<br>தீர்க்கரேகை : 77.94182° E | 2.136 | 7.50 |
| (xii) | சீங்காடு கிராமம்<br>அட்சரேகை : 12.31487° N<br>தீர்க்கரேகை : 77.92456° E | எரிமலை வழி அலக்காட்டு கிராமம் (காசர்குலி காப்புவனம்)<br>அட்சரேகை : 12.31720° N<br>தீர்க்கரேகை : 77.88472° E | 6.307 | 7.50 |

அனைத்து புவிசார் புள்ளிகளும் தசம கோணத்திலும் உலக புவிநிலை அமைப்பு (WTS) 1984 தரத்திலும் காட்டப்பட்டுள்ளன.

## 2. அடைவுப்பகுதிகள்

| தொ. எண். (1) | அடைவுப்பகுதிகளின் பெயர் (2) | காப்பு வனங்களின் பெயர் (3) |
|---|---|---|
| **I** | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| 1. | நாட்றம்பாளையம், கெர்ஹட்டி | பிலிகுண்டுலு, நாட்றம்பாளையம், உப்ரானி, அஞ்செட்டி |
| 2. | அத்திநத்தம் | தக்கட்டி, உரிகம் |

| தொ. எண். (1) | அடைவுப்பகுதிகளின் பெயர் (2) | காப்பு வனங்களின் பெயர் (3) |
|---|---|---|
| 3. | நூறுண்டுசாமிமலை, சிவபுரம் | தக்கட்டி, உரிகம் |
| 4. | உடுபரணி | உரிகம் |
| 5. | சிக்கபெட்டா | உப்ரானி |
| 6. | பிலிக்கல் | பிலிக்கல், உரிகம் |
| 7. | உரிகம் | கெஸ்தூர் விரிவாக்கம், கெஸ்தூர், பிலிக்கல் |
| 8. | நந்திபுரம் | பிலிக்கல், மல்லஹல்லி, உரிகம் |
| 9. | மஞ்சுகொண்டபள்ளி, பேல்பட்டி, கெஸ்தூர் | பிலிக்கல், மஞ்சுகொண்டபள்ளி |
| 10. | பிலிகுண்டுலு | நாட்றம்பாளையம் |
| **II** | **தருமபுரி மாவட்டம்** | |
| 11. | கோட்டூர்மலை | மொரப்பூர், காசர்குலி மற்றும் காசர்குலி விரிவாக்கம் |
| 12. | வெத்தலைக்கால் | கூட்டிராயன் |
| 13. | குண்டுக்கல் | மொரப்பூர், காசர்குலி மற்றும் காசர்குலி விரிவாக்கம் |
| 14. | எரிமலை | மொரப்பூர், காசர்குலி மற்றும் காசர்குலி விரிவாக்கம் |
| 15. | அலகட்டா | மொரப்பூர், காசர்குலி மற்றும் காசர்குலி விரிவாக்கம் |
| 16. | மொரப்பூர் கோவில் நிலம் | மொரப்பூர் |

**சுப்ரியா சாகு,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.**

*[அரசாணை (நிலை) எண். 198, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ 4 (2)]த் துறை, 11 நவம்பர் 2022.]*

| தொ. எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | அவினாசி | 20 | தெக்கலூர் |
| 2 | அவினாசி | 21 | செம்பியநல்லூர் |
| 3 | அவினாசி | 22 | வேலாயுதம்பாளையம் |
| 4 | அவினாசி | 23 | புதுப்பாளையம் |
| 5 | அவினாசி | 24 | கணியாம்பூண்டி |
| 6 | அவினாசி | 25 | ராக்கியாபாளையம் |
| 7 | அவினாசி | 26 | பழங்கரை |
| 8 | அவினாசி | 27 | அவிநாசி |
| 9 | அவினாசி | 34 | ஈட்டிவீரம்பாளையம் |
| 10 | அவினாசி | 40 | பெருமாநல்லூர் |
| 11 | அவினாசி | 41 | காளிபாளையம் |
| 12 | பல்லடம் | 01 | சாமளாபுரம் |
| 13 | பல்லடம் | 02 | இச்சிப்பட்டி |
| 14 | பல்லடம் | 03 | பூமலூர் |
| 15 | பல்லடம் | 04 | வேலம்பாளையம் |
| 16 | பல்லடம் | 05 | சுக்கம்பாளையம் |
| 17 | பல்லடம் | 06 | செம்மிபாளையம் |
| 18 | பல்லடம் | 07 | கோடங்கிபாளையம் |
| 19 | பல்லடம் | 08 | பருவாய் |
| 20 | பல்லடம் | 09 | கே. அய்யம்பாளையம் |
| 21 | பல்லடம் | 10 | கரடிவாவி |
| 22 | பல்லடம் | 11 | மல்லிகவுண்டன்பாளையம் |
| 23 | பல்லடம் | 12 | புளியம்பட்டி |
| 24 | பல்லடம் | 13 | கே. கிருஷ்ணாபுரம் |
| 25 | பல்லடம் | 14 | அனுப்பட்டி |
| 26 | பல்லடம் | 15 | பணிக்கம்பட்டி |
| 27 | பல்லடம் | 16 | சிற்றம்பலம் |
| 28 | பல்லடம் | 17 | வடுகபாளையம் |
| 29 | பல்லடம் | 18 | பல்லடம் |
| 30 | பல்லடம் | 19 | நாரணாபுரம் |
| 31 | பல்லடம் | 20 | கரைப் புதூர் |
| 32 | பல்லடம் | 21 | கணபதிபாளையம் |
| 33 | பல்லடம் | 22 | பொங்கலூர் |
| 34 | பல்லடம் | 23 | மாதப்பூர் |

| தொ. எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 35 | பல்லடம் | 24 | எலவந்தி |
| 36 | பல்லடம் | 25 | கேத்தனூர் |
| 37 | பல்லடம் | 26 | வாலிபாளையம் |
| 38 | பல்லடம் | 27 | எ. வடமலைபாளையம் |
| 39 | பல்லடம் | 28 | வி. காளிபாளையம் |
| 40 | பல்லடம் | 29 | காட்டூர் |
| 41 | திருப்பூர் வடக்கு | 01 | பொங்குபாளையம் |
| 42 | திருப்பூர் வடக்கு | 02 | கணக்கம்பாளையம் |
| 43 | திருப்பூர் வடக்கு | 03 | நெருப்பெரிச்சல் |
| 44 | திருப்பூர் வடக்கு | 04 | செட்டிபாளையம் |
| 45 | திருப்பூர் வடக்கு | 05 | வேலம்பாளையம் |
| 46 | திருப்பூர் வடக்கு | 06 | தொட்டிபாளையம் |
| 47 | திருப்பூர் வடக்கு | 07 | மண்ணரை |
| 48 | திருப்பூர் தெற்கு | 08 | திருப்பூர் |
| 49 | திருப்பூர் தெற்கு | 09 | ஆண்டிபாளையம் |
| 50 | திருப்பூர் தெற்கு | 10 | மங்கலம் |
| 51 | திருப்பூர் தெற்கு | 11 | இடுவாய் |
| 52 | திருப்பூர் தெற்கு | 12 | வீரபாண்டி |
| 53 | திருப்பூர் தெற்கு | 13 | முத்தனம்பாளையம் |
| 54 | திருப்பூர் தெற்கு | 14 | நல்லூர் |
| 55 | திருப்பூர் தெற்கு | 15 | முதலிபாளையம் |
| 56 | திருப்பூர் தெற்கு | 16 | நாச்சிபாளையம் |
| 57 | திருப்பூர் தெற்கு | 17 | பெருந்தொழுவு |
| 58 | திருப்பூர் தெற்கு | 18 | தொங்குடிபாளையம் |
| 59 | திருப்பூர் தெற்கு | 19 | உகாயனூர் |
| 60 | திருப்பூர் தெற்கு | 20 | வடக்கு அவிநாசிபாளையம் |
| 61 | திருப்பூர் தெற்கு | 21 | அழகுமலை |
| 62 | திருப்பூர் தெற்கு | 22 | கண்டியன்கோவில் |
| 63 | திருப்பூர் தெற்கு | 23 | தெற்கு அவிநாசிபாளையம் |
| 64 | ஊத்துக்குளி | 77 | செங்கப்பள்ளி |
| 65 | ஊத்துக்குளி | 78 | முத்தம்பாளையம் |
| 66 | ஊத்துக்குளி | 79 | புஞ்சை ஊத்துகுளி |
| 67 | ஊத்துக்குளி | 82 | அக்ரஹார பெரியபாளையம் |
| 68 | ஊத்துக்குளி | 83 | சர்க்கார் பெரியபாளையம் |

**ஹிதேஸ்குமார். எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 213, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ 4 (2)]த் துறை, 28 நவம்பர் 2022.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 2ஆம் பிரிவைச் சேர்ந்த தொடர் (48) ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் சேலம் மாவட்டத்திலுள்ள பின்வரும் வருவாய் கிராமங்களை சேலம் நகர திட்டமிடல் பகுதியாக இதனால் அறிவிக்கிறார்.

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (48) ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்திலுள்ள பின்வரும் வருவாய் கிராமங்களை திருப்பூர் நகர திட்டமிடல் பகுதியாக இதனால் அறிவிக்கிறார்.

| வ எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ஓமலூர் | 5 | பாலபள்ளி கோம்பை |
| 2 | ஓமலூர் | 6 | டேனிஷ்பேட்டை |
| 3 | ஓமலூர் | 7 | காடயாம்பட்டி |
| 4 | ஓமலூர் | 8 | நடுப்பட்டி |
| 5 | ஓமலூர் | 9 | நாச்சனம்பட்டி |
| 6 | ஓமலூர் | 10 | ஏலத்தூர் |
| 7 | ஓமலூர் | 11 | குண்டுக்கல் |
| 8 | ஓமலூர் | 12 | கொங்குபட்டி |
| 9 | ஓமலூர் | 13 | மரக்கோட்டை |
| 10 | ஓமலூர் | 14 | மூக்கனூர் |
| 11 | ஓமலூர் | 15 | தீவட்டிப்பட்டி |
| 12 | ஓமலூர் | 16 | பூசாரிப்பட்டி |
| 13 | ஓமலூர் | 17 | தாசகாசமுத்திரம் |
| 14 | ஓமலூர் | 18 | பண்ணப்பட்டி |
| 15 | ஓமலூர் | 19 | கூகுட்டைப்பட்டி |
| 16 | ஓமலூர் | 20 | தும்பிப்பாடி |
| 17 | ஓமலூர் | 21 | சிக்கனம்பட்டி |
| 18 | ஓமலூர் | 22 | தாராபுரம் |
| 19 | ஓமலூர் | 23 | கஞ்சநாய்க்கன்பட்டி |
| 20 | ஓமலூர் | 24 | செம்மாண்டப்பட்டி |
| 21 | ஓமலூர் | 25 | காளிப்பட்டி |
| 22 | ஓமலூர் | 26 | கட்டபெரியாம்பட்டி |
| 23 | ஓமலூர் | 27 | உம்பலிக்கமாரமங்கலம் |

| வ எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 24 | ஓமலூர் | 28 | டி. மாரமங்கலம் |
| 25 | ஓமலூர் | 29 | மனத்தாள் |
| 26 | ஓமலூர் | 30 | மல்லிகுட்டை |
| 27 | ஓமலூர் | 31 | அமரகுந்தி |
| 28 | ஓமலூர் | 32 | தொளசம்பட்டி |
| 29 | ஓமலூர் | 33 | துண்டுமாணியம் |
| 30 | ஓமலூர் | 34 | வேடப்பட்டி |
| 31 | ஓமலூர் | 35 | பெரயேரப்பட்டி |
| 32 | ஓமலூர் | 36 | ரெட்டிப்பட்டி |
| 33 | ஓமலூர் | 37 | திண்டமங்கலம் |
| 34 | ஓமலூர் | 38 | செட்டிப்பட்டி |
| 35 | ஓமலூர் | 39 | பச்சணம்பட்டி |
| 36 | ஓமலூர் | 40 | கருப்பனம்பட்டி |
| 37 | ஓமலூர் | 41 | பல்பாகி |
| 38 | ஓமலூர் | 42 | தாத்தய்யன்பட்டி |
| 39 | ஓமலூர் | 43 | கமலாபுரம் |
| 40 | ஓமலூர் | 44 | பொட்டிபுரம் |
| 41 | ஓமலூர் | 45 | சக்கரசெட்டிப்பட்டி |
| 42 | ஓமலூர் | 46 | போபிநாதபுரம் |
| 43 | ஓமலூர் | 47 | வெள்ளாளப்பட்டி |
| 44 | ஓமலூர் | 48 | ஜகதேவம்பட்டி |
| 45 | ஓமலூர் | 49 | காமிநாயக்கன்பட்டி |
| 46 | ஓமலூர் | 50 | தேக்கம்பட்டி |
| 47 | ஓமலூர் | 51 | தாத்தையங்கார்பட்டி |
| 48 | ஓமலூர் | 52 | மூங்கில்பாடி |
| 49 | ஓமலூர் | 53 | கொல்லப்பட்டி |
| 50 | ஓமலூர் | 54 | மைலப்பாளையம் |
| 51 | ஓமலூர் | 55 | நாரணம்பாளையம் |
| 52 | ஓமலூர் | 56 | எட்டிகுடைபட்டி |
| 53 | ஓமலூர் | 57 | செக்காரப்பட்டி |
| 54 | ஓமலூர் | 58 | கோடைமேட்டுப்பட்டி |
| 55 | ஓமலூர் | 59 | குள்ளமநாய்க்கன்பட்டி |
| 56 | ஓமலூர் | 60 | ஓமலூர் |
| 57 | ஓமலூர் | 60 | காஞ்சேரி காப்பு வனப்பகுதி |
| 58 | ஓமலூர் | 61 | புளியம்பட்டி |
| 59 | ஓமலூர் | 61 | பணிக்கரடு காப்பு வனப்பகுதி |
| 60 | ஓமலூர் | 62 | சங்கீதப்பட்டி |
| 61 | ஓமலூர் | 63 | கரூப்பூர் |
| 62 | ஓமலூர் | 64 | கோட்டகவுண்டம்பட்டி |
| 63 | ஓமலூர் | 65 | ஆனைக்வுண்டன்பட்டி |

| வ எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 64 | ஓமலூர் | 65 | கருவாட்டுப்பாறை காப்பு வனப்பகுதி |
| 65 | ஓமலூர் | 66 | சாமிநாயக்கன்பட்டி |
| 66 | ஓமலூர் | 67 | வெள்ளக்கல்பட்டி |
| 67 | ஓமலூர் | 68 | மாங்குப்பை |
| 68 | ஓமலூர் | 69 | பாகல்பட்டி |
| 69 | ஓமலூர் | 70 | செல்லப்பிள்ளைகுட்டை |
| 70 | ஓமலூர் | 71 | முத்துநாய்க்கன்பட்டி |
| 71 | ஓமலூர் | 74 | கோணகப்பாடி |
| 72 | ஓமலூர் | 75 | குருக்குப்பட்டி |
| 73 | ஓமலூர் | 76 | தாரமங்கலம் |
| 74 | ஓமலூர் | 77 | சிக்கம்பட்டி |
| 75 | ஓமலூர் | 78 | கசுவிரெட்டிப்பட்டி |
| 76 | ஓமலூர் | 79 | அரூர்பட்டி |
| 77 | ஓமலூர் | 80 | ராமிரெட்டிப்பட்டி |
| 78 | ஓமலூர் | 81 | செலவடை |
| 79 | ஓமலூர் | 82 | அரியம்பட்டி |
| 80 | ஓமலூர் | 83 | இலவம்பட்டி |
| 81 | ஓமலூர் | 84 | பணிக்கனூர் |
| 82 | ஓமலூர் | 85 | இடையப்பட்டி |
| 83 | ஓமலூர் | 87 | பாப்பம்பாடி |
| 84 | ஓமலூர் | 96 | தெசவிளக்கு |
| 85 | ஓமலூர் | 99 | அழகுசமுத்திரம் |
| 86 | ஓமலூர் | 131 | கருக்கல்வாடி |
| 87 | சங்ககிரி | 40 | புதூர் |
| 88 | சங்ககிரி | 41 | ஏகாபுரம் |
| 89 | சங்ககிரி | 45 | ஏரணபுரம் |
| 90 | சங்ககிரி | 46 | கனககிரி |
| 91 | சங்ககிரி | 47 | கூடலூர் |
| 92 | சங்ககிரி | 48 | கண்டர்குலமாணிக்கம் |
| 93 | சங்ககிரி | 66 | இடங்கணசாலை |
| 94 | சங்ககிரி | 67 | தெப்பக்குட்டை |
| 95 | சங்ககிரி | 68 | நடுவனேரி |
| 96 | சேலம் | - | சேலம் நகராட்சி பகுதி வார்டு A முதல் N வரை (சேலம் பழைய நகராட்சி பகுதி) |
| 97 | சேலம் | 1 | கீரபாப்பம்பாடி |
| 98 | சேலம் | 2 | மாரமங்கலத்துப்பட்டி |
| 99 | சேலம் | 3 | மூடுதுரை |
| 100 | சேலம் | 4 | குள்ளனம்பட்டி |
| 101 | சேலம் | 5 | கரிச்சிப்பட்டி |

| வ எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 102 | சேலம் | 6 | சித்தனூர்கொல்லப்பட்டி |
| 103 | சேலம் | 7 | அரியகவுன்டன்பட்டி |
| 104 | சேலம் | 8 | லகுவம்பட்டி |
| 105 | சேலம் | 9 | முருங்கப்பட்டி |
| 106 | சேலம் | 10 | பெத்தாம்பட்டி |
| 107 | சேலம் | 11 | நாயக்கன்பட்டி |
| 108 | சேலம் | 12 | தும்பாதூளிப்பட்டி |
| 109 | சேலம் | 13 | நல்லாம்பட்டி |
| 110 | சேலம் | 14 | பூமாண்டபட்டி |
| 111 | சேலம் | 15 | மல்லராவுத்தன்பட்டி |
| 112 | சேலம் | 16 | சர்க்கார் கொல்லப்பட்டி |
| 113 | சேலம் | 17 | மஜராகொல்லப்பட்டி |
| 114 | சேலம் | 18 | வட்டமுத்தாம்பட்டி |
| 115 | சேலம் | 19 | திருமலைகிரி |
| 116 | சேலம் | 20 | கொத்தனூர் |
| 117 | சேலம் | 21 | வேடகுத்தாம்பட்டி |
| 118 | சேலம் | 22 | தளவாய்ப்பட்டி |
| 119 | சேலம் | 23 | அய்யம்பெருமாள்பட்டி |
| 120 | சேலம் | 24 | மல்லமூப்பன்பட்டி |
| 121 | சேலம் | 25 | காமிநாயக்கன்பட்டி |
| 122 | சேலம் | 26 | ரெட்டியூர் |
| 123 | சேலம் | 27 | அழகாபுரம் |
| 124 | சேலம் | 28 | செட்டிச்சாவடி |
| 125 | சேலம் | 29 | கொண்டமநாய்க்கன்பட்டி |
| 126 | சேலம் | 30 | கன்னங்குறிச்சி |
| 127 | சேலம் | 31 | பாலப்பட்டி |
| 128 | சேலம் | 32 | கற்பகம் |
| 129 | சேலம் | 33 | வேடப்பட்டி |
| 130 | சேலம் | 34 | கோராத்துப்பட்டி |
| 131 | சேலம் | 35 | வீராணம் |
| 132 | சேலம் | 36 | வளையக்காரனூர் |
| 133 | சேலம் | 37 | பெருமாள்பாளையம் |
| 134 | சேலம் | 38 | பள்ளிப்பட்டி |
| 135 | சேலம் | 39 | தாசிநாயக்கன்பட்டி |
| 136 | சேலம் | 40 | தைலானூர் |
| 137 | சேலம் | 41 | சின்னானூர் |
| 138 | சேலம் | 42 | மேட்டுப்பட்டிதாதனூர் |
| 139 | சேலம் | 43 | வெள்ளியம்பதி |
| 140 | சேலம் | 44 | அதிகாரபட்டி |
| 141 | சேலம் | 45 | தாதம்பட்டி |
| 142 | சேலம் | 46 | உடையாப்பட்டி |
| 143 | சேலம் | 47 | அம்மாபேட்டை |
| 144 | சேலம் | 48 | குமாரசாமிபட்டி |
| 145 | சேலம் | 49 | அஸ்தம்பட்டி |
| 146 | சேலம் | 50 | அய்யம்பெருமாள்பட்டி |
| 147 | சேலம் | 51 | அழகாபுரம் புதூர் |
| 148 | சேலம் | 52 | எருமாபாளையம் |
| 149 | சேலம் | 53 | தாதகாபட்டி |
| 150 | சேலம் | 54 | ஆண்டிப்பட்டி |
| 151 | சேலம் | 58 | ஆண்டிப்பட்டி |
| 152 | சேலம் | 59 | அன்னதானப்பட்டி |
| 153 | சேலம் | 60 | பள்ளப்பட்டி |
| 154 | சேலம் | 61 | மெய்யனூர் |
| 155 | சேலம் | 62 | அன்னதானப்பட்டி |
| 156 | சேலம் | 63 | பள்ளப்பட்டி |
| 157 | சேலம் | 64 | மெய்யனூர் |
| 158 | சேலம் | 65 | பேடிநாயக்கன்பட்டி |
| 159 | சேலம் | 66 | சூரமங்கலம் |
| 160 | சேலம் | 67 | அரியாக்கவுண்டன்பட்டி |
| 161 | சேலம் | 68 | சேலத்தான்பட்டி |
| 162 | சேலம் | 69 | ஆண்டிப்பட்டி |
| 163 | சேலம் | 70 | சௌதாபுரம் |
| 164 | சேலம் | 71 | சுந்தம்பட்டி |
| 165 | சேலம் | 72 | கொண்டலாம்பட்டி |
| 166 | சேலம் | 73 | புத்தூர் |
| 167 | சேலம் | 74 | நெய்க்காரப்பட்டி |
| 168 | சேலம் | 75 | புரநாட்டாமங்கலம் |
| 169 | சேலம் | 76 | கொண்டலாம்பட்டி |
| 170 | சேலம் | 77 | சீலநாயக்கன்பட்டி |
| 171 | சேலம் | 78 | நிலவாரப்பட்டி |
| 172 | சேலம் | 79 | தம்மநாயக்கன்பட்டி |
| 173 | சேலம் | 80 | அட்டவணை பூலாவேரி |
| 174 | சேலம் | 81 | அக்கரஹார பூலாவரி |
| 175 | சேலம் | 82 | உத்தம சோழபுரம் |
| 176 | சேலம் | 83 | அரியாம்பாளையம் |
| 177 | சேலம் | 84 | பெருமாம்பட்டி |
| 178 | சேலம் | 85 | இளம்பிள்ளை |
| 179 | சேலம் | 86 | பெருமாகவுண்டன்பட்டி |
| 180 | சேலம் | 87 | ராமாபுரம் |
| 181 | சேலம் | 88 | ரெட்டிப்பட்டி |

| வ எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 182 | சேலம் | 89 | ஆனைக்குட்டைப்பட்டி |
| 183 | சேலம் | 90 | கல்பாரப்பட்டி |
| 184 | சேலம் | 91 | சேவாம்பாளையம் |
| 185 | சேலம் | 92 | கொம்பாடிப்பட்டி |
| 186 | சேலம் | 93 | சேனைபாளையம் |
| 187 | சேலம் | 94 | வேம்படிதாளம் |
| 188 | சேலம் | 95 | செல்லியம்பாளையம் |
| 189 | சேலம் | 96 | எட்டிமாணிக்கம்பட்டி |
| 190 | சேலம் | 97 | ராக்கிப்பட்டி |
| 191 | சேலம் | 98 | கடத்தூர் அக்ரஹாரம் |
| 192 | சேலம் | 99 | இராஜாபாளையம் |
| 193 | சேலம் | 100 | நையினாம்பட்டி |
| 194 | சேலம் | 101 | தானகுட்டிபாளையம் |
| 195 | சேலம் | 102 | ஆட்டையாம்பட்டி |
| 196 | சேலம் | 103 | மருளையம்பாளையம் |
| 197 | சேலம் | 104 | முத்தனம்பாளையம் |
| 198 | சேலம் | 105 | பாப்பாரப்பட்டி |
| 199 | சேலம் | 106 | வேலநத்தம் |
| 200 | சேலம் | 107 | சென்னகிரி |
| 201 | சேலம் | 108 | பெத்தாம்பட்டி |
| 202 | சேலம் | 109 | பைரோஜி |
| 203 | சேலம் | 110 | நல்லாரைய்யம்பட்டி |
| 204 | சேலம் | 111 | சின்னசீரகாப்பாடி |
| 205 | சேலம் | 112 | பெரியசீரகாப்பாடி |
| 206 | சேலம் | 113 | வீரபாண்டி |
| 207 | சேலம் | 114 | சித்தனேரி |
| 208 | சேலம் | 115 | அக்கரைப்பாளையம் |
| 209 | சேலம் | 116 | பாலம்பட்டி |
| 210 | சேலம் | 117 | வாணியம்பாடி |
| 211 | சேலம் | 118 | எரசினம்பட்டி |
| 212 | சேலம் | 119 | ஏர்வாடி பெத்தாம்பட்டி |
| 213 | சேலம் | 120 | வாழகுட்டப்பட்டி |
| 214 | சேலம் | 121 | எருமநாயக்கன்பாளையம் |
| 215 | சேலம் | 122 | வேங்காம்பட்டி |
| 216 | சேலம் | 123 | மூக்குத்திப்பாளையம் |
| 217 | சேலம் | 124 | பசுவநத்தம்பட்டி |
| 218 | சேலம் | 125 | பாரப்பட்டி |
| 219 | சேலம் | 126 | நாழிக்கல்பட்டி |
| 220 | சேலம் | 127 | சந்தியூர் |
| 221 | சேலம் | 128 | அம்மாபாளையம் |
| 222 | சேலம் | 129 | மல்லூர் |
| 223 | சேலம் | 130 | பள்ளித்தெருப்பட்டி |
| 224 | சேலம் | 131 | சந்தியூர் ஆட்டையாம்பட்டி |
| 225 | சேலம் | 132 | கெஜ்ஜல்நாயக்கன்பட்டி |
| 226 | சேலம் | 133 | ஜருகுமலை |
| 227 | சேலம் | 134 | பனமரத்துப்பட்டி |
| 228 | சேலம் | 135 | திப்பம்பட்டி |
| 229 | சேலம் | 136 | குரால்நத்தம் |
| 230 | சேலம் | 137 | கோணமடுவு |
| 231 | சேலம் | 138 | வேடப்பட்டி |
| 232 | சேலம் | 139 | நூலாத்துக்கோம்பை |
| 233 | சேலம் | 140 | சாம்பகுட்டைப்பட்டி |
| 234 | சேலம் | 141 | அடிமலைப்பட்டி |
| 235 | சேலம் | 142 | தும்பல்பட்டி |
| 236 | சேலம் | 143 | ஜல்லு ஆத்துப்பட்டி |
| 237 | சேலம் | 144 | கம்மாளப்பட்டி |
| 238 | சேலம் | 145 | வலசையூர் |
| 239 | சேலம் | 146 | சுக்கம்பட்டி |
| 240 | சேலம் | 147 | தாதனூர் |
| 241 | சேலம் | 148 | மூக்கனூர் |
| 242 | சேலம் | 149 | கத்திரப்பட்டி |
| 243 | சேலம் | 150 | ஆச்சாங்குட்டப்பட்டி புதூர் |
| 244 | சேலம் | 151 | அரமனூர் |
| 245 | சேலம் | 152 | ஆச்சாங்குட்டப்பட்டி |
| 246 | சேலம் | 153 | குப்பனூர் |
| 247 | சேலம் | 156 | அக்ரஹாரநாட்டாமங்கலம் |
| 248 | சேலம் | 158 | காரப்பட்டி |
| 249 | சேலம் | 159 | பெரியக்கவுண்டாபுரம் |
| 250 | சேலம் | 160 | சின்னக்கவுண்டாபுரம் |
| 251 | சேலம் | 161 | அயோத்தியாப்பட்டிணம் |
| 252 | சேலம் | 162 | மின்னாம்பள்ளி |
| 253 | சேலம் | 163 | குள்ளம்பட்டி |
| 254 | சேலம் | - | ஜல்லு ஆத்துப்பட்டி காப்பு வனம் |
| 255 | சேலம் | - | ஜருகுமலை காப்பு வனம் |
| 256 | சேலம் | 221 | கஞ்சமலை காப்பு வனம் |
| 257 | சேலம் | – | நாகர்மலை காப்பு வனம் |
| 258 | வாழப்பாடி | 17 | கோலாத்துக்கோம்பை |
| 259 | வாழப்பாடி | 18 | நீரமுள்ளிக்குட்டை |
| 260 | வாழப்பாடி | 19 | அனுப்பூர் |

| வ எண். | வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 261 | வாழப்பாடி | 20 | விளாம்பட்டி |
| 262 | வாழப்பாடி | 21 | கூட்டாத்துப்பட்டி |
| 263 | வாழப்பாடி | 22 | பாலப்பட்டி |
| 264 | வாழப்பாடி | 23 | ஏரிப்புதூர் |
| 265 | வாழப்பாடி | 32 | சர்க்கார் நாட்டாமங்கலம் |
| 266 | வாழப்பாடி | 33 | கருமாபுரம் |
| 267 | வாழப்பாடி | 34 | மேட்டுப்பட்டி |
| 268 | வாழப்பாடி | 35 | பெருமாள்பாளையம் |
| 269 | வாழப்பாடி | 36 | காட்டுவேப்பிலைப்பட்டி |
| 270 | வாழப்பாடி | 37 | கவர்கல்பட்டி |
| 271 | வாழப்பாடி | 38 | சென்றயாம்பாளையம் |
| 272 | வாழப்பாடி | 39 | வெள்ளாளகுண்டம் |
| 273 | வாழப்பாடி | 40 | திருமானூர் |
| 274 | வாழப்பாடி | 46 | மாசிநாயப்கன்பட்டி |
| 275 | வாழப்பாடி | 47 | வேப்பிலைப்பட்டி |
| 276 | வாழப்பாடி | 87 | குடமலை காப்பு வனம் |
| 277 | வாழப்பாடி | 180 | வெள்ளாளகுண்டம் காப்பு வனம் |

**ஹிதேஸ்குமார் எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 32, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ 4 (2)]த் துறை, 8 மார்ச் 2023.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 35/1972, 10—ஆம் பிரிவைச் சேர்ந்த 4 உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கம்பம் உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களைச் சேர்த்து 17.04.1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல் 222 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)RUL/2161/1974 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். அவ்வாறு சேர்ப்பதற்கான நோக்கம் மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் உள்ள அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

**அட்டவணை**

**வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் தேனிவட்டம்**

25. கம்பம் (பகுதி)

24 உத்தமபுரம் (பகுதி)

23. புதுப்பட்டி

22 ஹனுமந்தன்பட்டி

**அபூர்வா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி) பெயர்ப்புத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.